## பெற்றோர் நன்றி

தமிழரின் பாரம்பரியக் கலைகளில் பரதக்கலையும் ஒன்றாகும். இது மனதிற்கு அமைதியையும், சந்தோஷத்தையும் தருவதோடு உடலிற்கு ஆரோக்கியத்தையும் தருகின்றது. இக்கலையானது தமிழரின் நாகரீக வளர்ச்சி, பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றை உலகமெல்லாம் பறைசாற்றி நிற்கின்றது. இதுமட்டுமல்ல இன்று இப்பரதக்கலையை ஐரோப்பிய நாடெங்கும் இனமத வேறுபாடின்றிப் பயின்று வருகின்றனர். இப்பரதக்கலையில் பொன்றாப் புகழுடன் குன்றின் மேலிட்ட தீபமாக விளங்குபவர் எமது புத்திரியின் நடன ஆசிரியர் ஸ்ரீமதி யாழினி பாலேந்திரன் அவர்கள். இவர் பரதநாட்டியத்தில் எம்.ஏ., பட்டப்படிப்பை சிறந்த முறையில் முடித்துள்ளார். இந்தக் கலையை முறையாகப் பயின்று தனக்கென ஒரு பாணியை உருவாக்கி, அதைத் தன் மாணவருக்கும் பயிற்றுவித்து வருபவர்தான் எங்கள் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய திருமதி. யாழினி பாலேந்திரன் அவர்கள். இவர் எமது மகள் செல்வி நிவேதா அவர்களுக்கு ஆறு வயதிலிருந்து இப்பரதக்கலையை பயிற்றுவித்து இன்று அரங்கேற்றம் காணவைத்துள்ளார். இதற்காக எந்தச் சிரமங்களையும் பாராது அல்லும் பகலும் அயராது உழைத்தார். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

“தோன்றிற் புகழுடன் தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று” என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, தான் எப்படிப் புகழுடன் வாழ்கின்றாரோ அப்படியே தன் மாணவரையும் உலகில் வாழவேண்டும் என்ற கொள்கையோடு, இலட்சியத்துடன் தன் மாணவர்களுக்கு பாடம் புகட்டுவார். இப்படிப்பட்ட இவரின் இக்கலைப் பயணம் சிறந்த முறையில் நீண்டகாலம் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வணங்குகின்றோம்.

அத்துடன் எங்களின் அன்பான அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்கள் அவர்களுக்கும் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இந்நிகழ்ச்சிக்கு சிறந்த முறையில் வாய்ப்பாட்டைப் பாடிய ஆசிரியர் திருமதி. குமுதினி பிரித்விராஜ் அவர்களுக்கும், பக்கவாத்தியக் கலைஞர்களுக்கும், நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கும், ஒலி ஒளி அமைத்துத் தந்தவர்களுக்கும், புகைப்படம், வீடியோ எடுத்தவர்களுக்கும், ஒப்பனையாளர்களுக்கும், இங்கே வருகைதந்திருக்கும் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் இந்நிகழ்ச்சியை சிறந்த முறையில் ஒழுங்கமைப்புச் செய்த நடன ஆசிரியரின் கணவர் திரு. பாலேந்திரன் அவர்களுக்கும், இவ் அரங்கேற்றத்திற்கு எல்லா வழிகளிலும் உதவிபுரிந்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



www.menakacard.com




# Bharathanatya Arangetram



## Nivetha Selvaratnam

(Disciple of Bharatha Kalaimani Smt. YALINI P. BALENDREN)

29-10-2011



## குருவின் ஆசியுரை

பரதநாட்டியக் கலையானது பரத முனிவர் எழுதிய நாட்டிய சாஸ்திரத்தை அடித்தளமாகக் கொண்டது. கைவழி நயனம் செல்ல, கண்வழி மனம் செல்ல காண்போர் பேருவகை கொள்ள வைக்கும்வண்ணம் பாவம், ராகம், தாளம் என்னும் முப்பரிமாணங்களைக் கொண்டு விளங்குவது பரதக்கலையாகும். இவ்வரிய நடனக் கலையை இன்று அரங்கேற்றங்காணும் செல்வி நிவேதா செல்வரட்ணம், தனக்கு ஊக்கமும் பயிற்சியும் அருளும் கொடுத்த இறைவனுக்கும், பெற்றோருக்கும், குருவிற்கும் சமர்ப்பணம் செய்கின்ற ஓர் இனிய, மறக்க முடியாத நாளாகும்.

செல்வி நிவேதா செல்வரட்ணம் அவர்கள் ஆறாவது வயதில் இருந்து எனது நாட்டியப் பள்ளியாகிய "நித்திய சதங்கை நர்த்தனாலயத்தில்" பரதம் பயின்று வருகின்றார். ஆரம்பநாட்களிலேயே அவர் நடனத்தின் மீது கொண்ட ஈடுபாடும், குருபக்தியும், விடாமுயற்சியும்தான் இன்று இவர் அரங்கப்பிரவேசம் காணும் அளவிற்குக் கொண்டு வந்திருக்கின்றது. இவர் சிறுவயதிலிருந்து பல நடன நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிப் பலரின் பாராட்டையும் பெற்றவர். அத்துடன் Oriental Examination Board, London நடாத்தும் பரீட்சையில் தரம் ஐந்துவரையும் திறமையாகச் சித்தியடைந்துள்ளார். அதுமட்டுமன்றி அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவனம் (I.I.T.A.) நடாத்தும் பரீட்சையில் தரம் நான்கு வரை தோற்றியுள்ளார். இவருடைய நாட்டிய அரங்கப் பிரவேசம் மிகவும் சிறப்பாக நடைபெறவும், மேலும் இக்கலையைக் கற்று உலகம் போற்றும் நர்த்தகியாக மிளிரவேண்டுமென எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனை வேண்டி ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



### ABOUT MY GURU

Smt. Yalini P. Balendren (Specialist in Pediatric Nursing)

1996 : The first performer of Bharathanatya Arangetram in Denmark.

1999 : Yalini founded "Narthanalayaa" with the intention of committing herself to the propagation of the classical arts.

2001 : Under the guidance of the distinguished exponent of Bharathanatyam, PadmashriChitraVisweswaran, Yalini received bharathanatya teaching certificate. Awarded the title "Nithya BharathaYothi" by Pitchumani Iyar and NatyaVisaradha R. Padma (NarathaGnanasaba in India)

2006 : Enrolled as a student at Faculty of Arts, Bharathidasan University at Thiruchirappalli, India.

2009 : B.F.A., degree in Bharathanatyam.

2011 : M.F.A., degree in Bharathanatyam.
Awarded the title "Bharathakalaimani" by R. Uma Maheshwari (M.A. Yoga & Ph.d. Student in Bharathanatyam & School Headmaster) Kalai Kaviri College of Fine Arts





## உள்ளம் நிறைந்த உறவினர்கள் வாழ்த்து

இசைக்கலை, சிற்பக்கலை இவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இப் பரதக்கலை பாரம்பரியத் தமிழ்க் கலை வடிவங்களில் ஒன்று. இவ் ஆடற்கலையில் அறிந்தவற்றை அரங்கில் நிகழ்த்தி அவையோரின் பாராட்டைப் பெறவிருக்கும் எமது அருந்தவப் புதல்வி செல்வி நிவேதாவே! உங்களை உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம். ஆடற்கலையை மென்மேலும் வளர்த்து உங்களால் இயன்ற பங்களிப்பை கலையுலகத்திற்கு வழங்கி வாழ்வின் வளங்கள் யாவும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.

உறவினர்கள், இலங்கை.








## குருவைப்பற்றி

குரு வாழ்க! குருவே துணை!

அறுபத்துநான்கு கலைகளில் பரதக்கலையும் ஒன்றாகும். இது பாவம், ராகம், தாளம் என்பவற்றின் சங்கமமாகும். இதனைத் தமிழர்களின் பாரம்பரியக்கலை என்பர். நமது பண்பாட்டையும், நாகரீகத்தையும் உலகெங்கும் பறைசாற்றுவதும் பரதக்கலையே என்றால் மிகையாகாது. அப்பரதக்கலையில் மிகச்சிறந்து விளங்கும் ஆசிரியர் ஸ்ரீமதி யாழினி பாலேந்திரம் அவர்களிடத்தில் எனது ஆறாவது வயதில்இருந்து இக்கலையைப் பயின்று வருகின்றேன். இன்று அரங்கேற்றம் காணும் அளவிற்கு உயர்ந்துள்ளேன். எனது ஆசிரியர் எனக்குக் குருவாக கிடைத்தது மிகப்பெரிய வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர் எனக்கு நடனம் கற்பிக்கும் நேரங்களில் அன்னையைப் போல் அரவணைத்தும், கண்டிக்கும் நேரங்களில் கண்டித்தும் பாடங்களைக் கற்றுத்தருவார். மற்றைய நேரங்களில் தனது சகோதரியாக, தோழியாக அன்புகாட்டுவார். பாசத்துடன் பழகுவார். இப்படியான ஒரு குருவை நான் பெற்றது நற்பேறே எனக்கூறி, எனது சிரத்தை ஆசிரியரின் இருபொற்பாதங்களிலும் வைத்து வணங்கி மீண்டும் நன்றியைத் தெரிவிக்கும் இவ்வேளையில் எனது பெற்றோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.









## ஸ்ரீமதி யாழினி பா பாலேந்திரன் - நட்டுவாங்கம்

பரதநாட்டிய ஆரம்பக் கல்வியை யாழ் சதங்கை நர்த்தனாலய ஆசிரியை நடனக் கலாஜோதி லீலா நாராயணன் அவர்களிடம் பயின்றார். பின்னர் திருமதி. மாலா சத்தியமூர்த்தி அவர்களிடத்தில் இக்கலையைக் கற்று டென்மார்க்கில் முதல் மாணவியாக அரங்கேற்றம் செய்து கொண்டவர் என்ற பெருமையும் பெற்றவர். அத்துடன் ஈழத்தமிழர் கலையரங்கத்தினர் 1996ஆம் ஆண்டிற்கான சிறந்த கலைஞர் விருதினை வழங்கிக் கௌரவித்தனர். 1998 ஆம் ஆண்டு இந்தியாவில் நட்டுவாங்கம் உட்பட பல உருப்படிகளையும் (குச்சுப்புடி, மோகினி ஆட்டம், பொம்மை நடனம்) பயின்று சென்னை நாரதகான சபாவில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தினார். இந்நிகழ்வில் "நித்திய பரதஜோதி" என்ற சிறப்பு பட்டத்தினை வீணை வித்துவான் பிச்சுமணி ஐயர் முன்னிலையில் பெற்றுக்கொண்டார். அத்துடன் நிருத்திய சூடாமணி கலைமாமணி பத்மஸ்ரீ சித்ரா விஸ்வேஸ்வரனிடம் பரதக்கலையைத் தொடர்ந்து கற்றுக் கொடுப்பதற்கான சான்றிதழையும் பெற்றார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் வளாகம் கடந்த நுண்கலைக்கான இளமானி பட்டப்படிப்பை 2006 முதல் கற்றுக்கொண்டு சிறப்பாகத் தேர்ச்சி பெற்று 2009 முதல் முதுமானி பட்டப்படிப்பை அதே பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2011ல் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்.



### Accompanying Artists



Vocal :
Smt. Kumuthini Prithviraj




Flute :
Punitha Baskaran






Miruthangam :
Sudhaman



Veena :
Gitta Swaminathan



Violin :
Kalyani Shankar



Thampura : Mehavi
Pathmasekaran



## தாத்தா அம்மம்மா வாழ்த்து



கண்ணுக் கெட்டாத் தூரத்தே கண்ணே நீயும் இருந்தாலும் எண்ணம்போல் நின் கலைகள் ஏற்றம் பெற்று வளரட்டும். மண்ணின் பெருமை சேர்க்க இன்னும் மகிழ்வாய் பலகலை கற்றே பெண்ணே ! பேத்தி நிவேதா! தாத்தா, அம்மம்மா வாழ்த்துகிறோம். வற்றாத புகழ் பெற்றே வையகத்தில் நீ வாழ பெற்றோருடன் நாம் சேர்ந்தே பெருமையுடன் வாழ்த்துகிறோம். கற்றோரும் புகழ்பாட நீ கலைகள் இன்னும் பல பயின்று சற்றேனும் இறுமாப்பின்றிச் சாதனைகள் படைக்க வாழ்த்துகிறோம். அரிய பல சாதனைகள் நீ படைக்க எங்கள் அருகிலிருக்கும் அம்மா உனக்குத் துணையிருப்பாள் அஞ்சேல்! கலைகள், சாதனைகள் யாவுமே தருபவள் எங்கள் அம்மா ஸ்ரீ பெரியநாயகி அம்பாள் ஆசியும் அருளும் கிடைக்கும்.



## அத்தை, மாமா குடும்பத்தினர் வாழ்த்து

செல்வ-மதி பெற்றெடுத்த எங்கள் செல்வியே, கண்மணியே, நிவேதா கல்வியில் வளர்ச்சிதனைக் கண்டுயர்ந்தாய். கலைச்செல்வியின் அருளால் பரதக்கலை பயின்றாய். எங்கள் நெல்லியடியோடு ஞாலம் புகழ வாழ்த்துகிறோம். மெத்தப் புகழ், பொருள் பெற்று மேதினியில் நீ வாழ, உன் அத்தை விமலாவுடன் அருமைமிக்க மாமாவும், குடும்பத்தினரும் வித்தைகள் இன்னும் பல மேதினியில் நீ பயின்று தத் தெய் தா என்றே ஆட, ஆசி பல தந்தோம். நீ வாழ்க.



## REPETORIE

**PUSHPANJALI AND ALARIPU**

Ragam : Hamsananthi — Thalam : Aathi

Ragam : Naaddai — Thalam : Thisra egam

**JATHISWARAM**

Ragam : Vasaspathi — Thalam : Rupagam

**MURUGAN KAVUTHUVAM**

Ragam : Shanmugapriya — Thalam : Rupagam

**VARNAM**

Ragam : Sankaraparanam — Thalam : Aathi

*Intermission*

**PATHAM**

Ragam : Jamankalyani — Thalam : Aathi

**KEERTHANAM**

Ragam : Kethaaragaula — Thalam : Rupagam

**THAMIL VAZHTHU**

Ragam : Ragamalika — Thalam : Aathi

**MAYIL NADANAM**

Ragam : Ragamalika — Thalam : Rupagam

**THILLANA**

Ragam : Revathi — Thalam : Aathi

*Mangalam*







## ஆசிச் செய்தி



மனித உணர்ச்சிகளின் பிரதிபலிப்பின் வடிவமே கலைகளாக உருப்பெறுகின்றன. உணர்ச்சிகள் இரஸங்களாகி பாவ, ரஸ பேதங்களில் இணைந்து வரும்போது அவை மனித மனத்திற்கு இன்பம் பயக்கும் தெய்வீகக் கலைகளாக உருப்பெறுகின்றன. சிற்பம், சித்திரம், சங்கீதம், நாட்டியம் ஆகியவைகளும் நுண்கலைகள் எனலாம். இந்நுண்கலைகள் மனித உள்ளங்களின் பண்பையும், பண்பாட்டினையும் வளர்த்து தெய்வீகச் சிந்தனை, குருபக்தி போன்ற கலாசார விஷயங்களையும் மேம்படச் செய்து பக்திக் கலையாக விளங்குகிறது.

இவ்விதமாக வளரும் பக்திக் கலையாம், பரதக்கலையை பாங்குடன் செல்வி. நிவேதா செல்வரட்ணம் அவர்கள் திருமதி. யாழினி பாலேந்திரன் அவர்களிடம் முழுமையாகப் பயின்று அரங்கப் பிரவேசம் காண விழைந்துள்ளார். அவர் குருவின் வழிகாட்டலில் சிறப்புடன் பயின்று புலம்பெயர் நாடாம் டென்மார்க்கில் அரங்கப் பிரவேசம் செய்கிறார். எனவே நல்ல முறையிலும், சிறந்தமுறையிலும் அரங்கப் பிரவேசம் நடைபெற எல்லாம் வல்ல தில்லை நடராஜப்பெருமான் அருள்பாலிக்க வேண்டும் என்று பிரார்த்தித்து என் நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் வழங்குகின்றேன். நன்றி !

வாழ்க கலை ! வளர்க நம் கலைப் பாரம்பரியம் !.

இப்படிக்கு,
கலாகீர்த்தி ஸ்ரீமதி. சாந்தினி சிவநேசன்
விரிவுரையாளர் - ஆசிரிய கலாச்சார,
கோப்பாய்



## சங்கீத ஆசிரியை திருமதி. தர்மவதி இராமச்சந்திர மூர்த்தி அவர்களின் வாழ்த்து

கலைகள் மனித வாழ்வுடன் ஒன்றித்து நிற்பவை. அவற்றின் தன்மைக்கேற்ப அவை மனிதனை புடமிட்டு அவனது வாழ்வை வளப்படுத்தி நிற்பவையாகும். அழகும் பண்பும் ஒருங்கே அமையப்பெற்ற அற்புதக்கலை பரதக்கலை. அவசரமான, அதிசயமான இன்றைய காலகட்டத்தில் நின்று நிதானமாக ஆடற்கலைக்குள் மாணவர்களை ஐக்கியப்படுத்தி அழைத்துச்சென்று அதன் செம்மையையும், செழுமையையும் மாணவர்களுக்கு உணரவைக்கும் ஆசிரியை திருமதி. யாழினி பாலேந்திரன் அவர்கட்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

செல்வி நிவேதா செல்வரட்ணம் பொறுமையும், குருபக்தியும், விடாமுயற்சியும் உள்ள அருமையான மாணவி. என்னிடம் சங்கீதக் கலையையும் முறையாகக் கற்று வருகிறார். கலைகள்மேல் அவர்தம் ஈடுபாடும் குருபக்தியும், பெற்றோர் பெரியோரை மதிக்கும் பண்பும் இவரிடம் உள்ள சிறந்த குணங்கள். இதற்காக இவரது பெற்றோர் திரு. திருமதி. செல்வரட்ணம் அவர்கட்கும் எனது அன்பையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று அரங்கேற்றங்காணும் செல்வி நிவேதா அவர்கள் இன்னும் பல சிறப்புக்களைப் பெற்று எம் இளையோருக்கு உதாரணமாக திகழ எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்,
சங்கித வீணை ஆசிரியை திருமதி.
தர்மவதி இராமச்சந்திரமூர்த்தி
நாத சொருபா இசைக்கல்லூரி
மாலதி தமிழ்க் கலைக்கூடம்,
டென்மார்க்.





## டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம் வாழ்த்து

உலகத்தின் அசைவுகளுக்கெல்லாம் மூலப் பொருளாகிய நடராஜப்பெருமானால் எமக்கு வழங்கப்பட்ட பரதக்கலையை சிறுவயதில் இருந்து பற்றுடன் பயின்றுவரும் செல்வி நிவேதா செல்வரட்ணம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் மிகவும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்றும், அவர் டென்மார்க்கில் தலைசிறந்த நர்த்தகியாக வளரவேண்டும் என்றும் எல்லாம் வல்ல நடராஜப்பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம்
SKJERN, TARM, RINGKOBING

## SKJERN மாலதி தமிழ்க்கலைக்கூடத்தின் வாழ்த்து

புலம்பெயர் நாடுகளில் எம் தமிழ்ச்சிறார்களுக்காக தமிழோடு கலைகளையும், பண்பையும் கற்றுக்கொடுக்க உருவான கலைக்கூடங்களில் டென்மார்க் மாலதி தமிழ்க்கலைக்கூடம் SKJERN நகரில் தனது பணியை சிறப்பே செய்து கொண்டிருக்கின்றது. எம் கலைக்கூடத்தில் கலை ஆசிரியர்களும் தங்கள் பங்கினைச் சிறப்பே செய்கின்றார்கள். இதில் திருமதி. யாழினி பாலேந்திரன் அவர்களின் பங்களிப்பு மிகச் சிறப்பானது. இவரின் மாணவி செல்வி நிவேதா செல்வரட்ணம் இன்று பரதநாட்டிய அரங்கேற்றம் செய்வதையிட்டு எமது கலைக்கூடம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றது. இவர்தம் பெற்றோர் தமிழ்மேலும் கலைகள்மேலும் காட்டும் சிறப்பான ஈடுபாட்டுக்கு கலைக்கூடம் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்நிகழ்வு சிறப்புற அமைய கலைக்கூட நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

SKJERN மாலதி தமிழ்க்கலைக்கூடம்
டென்மார்க்